UNIVERSITY OF SRI LANKA ... CAMPUS
RECEIVED
1980-12-2
PERIODICALS
LIBRARY



நிக்கோவுக்கு வேறு கிளை இல்லை

பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
EELANADU

மலர் 21 மார்கழி 14 ஸபர் 9 இதழ் 320
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29-12-79

தரத்தில் நிகரற்ற
மான், முயல், விளக்கு,
வரிக்குதிரை,
செவன மார்க்
ஓடுகளுக்கு
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

# ஆப்கானில் இராணுவப்புரட்சி
# ஜனாதிபதி தூக்கிலிடப்பட்டார்!

## சோவியத் துருப்புகள் நடமாட்டம்
## வீதிகளில் பரவலாகச் சண்டை

### வெளிநாடுகளுடன் தொடர்பும் துண்டிக்கப்பட்டது

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவப்புரட்சியைத் தொடர்ந்து, முன்னாள் உபஜனாதிபதி ஜனாப் கர்மல், புதிய ஜனாதிபதியாகப் பதவிப் பொறுப்பேற்றுள்ளார். முன்னாள் ஜனாதிபதி கபிடில்லா அமீன் நேற்று தூக்கிலிடப்பட்டார்!**

ஆப்கானிஸ்தானில் கடந்த இரண்டு வருடங்களில் மூன்று வது தடவையாக இப்பொழுது இராணுவப்புரட்சி ஏற்பட்டது.

திடீர்ப்புரட்சியைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி அமீன்மீது உடனடியாகவே புரட்சிமன்றம் விசாரணை நடத்தி, அவருக்கு மரண தண்டனை விதித்தது. அமீன் தூக்கிலிடப்பட்டதன் மூலம் இத்தண்டனை நேற்று நிறைவேற்றப்பட்டதாக காபூல் வானொலி அறிவித்தது.

தீவிர மார்க்ஸிஸவாதியான புதிய ஜனாதிபதி கார்மல், சோவியத் துருப்புக்களின் உதவியுடனேயே திடீர்ப்புரட்சியை நடத்தியதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

வெளிநாடுகளுடனான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. காபூல் விமான நிலையமும் மூடப்பட்டுள்ளது.

ஏஜன்ஸி செய்திகளின்படி வீதிகளில் பரவலாகச் சண்டை நடைபெறுவதாகத் தெரியவருகிறது. சோவியத் துருப்புக்கள் அதிக அளவில் காணப்படுவதுடன், அவர்கள் நேரடியாக ஈடுபட்டு வருவதாகவும் இச்செய்திகள் தெரிவித்தன.

... நேரத்தில் அதிக அளவில் சோவியத் துருப்புக்கள் காபூல் நோக்கி வந்துகொண்டிருப்பதாக மற்றுமொரு செய்தி தெரிவித்தது.

முன்னாள் ஜனாதிபதி அமீன் தொடர்ச்சியாக சோவியத் யூனியனின் கண்டனத்துக்குள்ளாகி வந்தார் என்றும் இப்பொழுது இராணுவப்புரட்சி நடத்தியிருக்கும் கார்மல், சோவியத்யூனியனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

"ஈழநாடு"
போட்டி
ரூ.5000 பரிசுகள்

இந்தியத் தேர்தல் போட்டி "ஈழநாடு" நடத்தும் தேர்தல் போட்டிக்கு உங்கள் கூப்பனை அனுப்ப—
இன்னும் மூன்று தினங்களே உண்டு!
முந்துங்கள்!
ஐயாயிரம் ரூபா பரிசுகளையும் நீங்கள் வெல்ல வேண்டும்!

போட்டி முடிவு
திகதி:
31-12-79

## அவசரகாலச் சட்டம்
## யாழ். மாவட்டத்தில் நீக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆறுமாத காலமாக யாழ் மாவட்டத்தில் அமுலிலிருந்த அவசரகாலச் சட்டம் நேற்று முன்தினம் நீக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடந்த ஜூலை மாதம் 11ந் திகதி யாழ் நிர்வாக மாவட்டத்தில் அவசரகாலச் சட்டவிதிகள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டன.

நிலைமை இவ்வாறு இருக்க யாழ் மாவட்டத்தின் பாதுகாப்பு அதிகாரியான பிரிகேடியர் வீரதுங்க பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் யாழ் மாவட்டத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் மீது விரைவில் வழக்கு தொடரப்படும் என்று தெரிவித்துள்ளார்.

"பொதுமக்களின் ஒத்துழைப்பு நீடிக்கும்வரை யாழ் மாவட்டத்தில் பயங்கரவாதம் உயிர் பெறாது" என்று தெரிவித்த பிரிகேடியர் வீரதுங்க, பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை வெற்றிகரமாக கைது செய்துள்ளோம்" என்றும் கூறினார்.

## "திருவாசக அன்பிலக்கியம்
## நம் நெஞ்சத்தில் தேன் பாய்ச்சுகிறது"

### மணிவாசகர்விழாவில் தமிழ்ப்பேராசிரியர் செல்வக்கணபதி



(யாழ்ப்பாணம்)

"தெளிந்த உணர்வும், ஒளி, அருளனுபவ வெளிப்பாடும் திருவாசகத்தில் காணப்படுவனபோல், தமிழ்நூல்களுள் வேறெங்கும் காணப்படவில்லை. இதனை, ஓர் அன்பிலக்கியம் எனவும், அருளனுபவப் பெட்டகம் எனவும் சான்றோர் பலரும் பாராட்டிப் போற்றுவர். அறிவியலும் - அருளியலும், இன்பியலும்-உலகியலும் திருவாசகத்துள் காணப்படினும், அன்பின் இயல்பைத் திருவாசகம் ஏதோ ஒரு நோக்கில் விரிவாக வரையறுத்திருக்க வேண்டும் இல்லையென்றும், அன்பு அருளுடைமை - அன்புப் பிழம்பாக - அன்பின் பயனை இங்கே தண்டமிழ்ச் சான்றோர் பெரிதெடுத்துப் போற்றியிருக்க இடமிருக்கிறது. திருவாசகத்தில் அன்பியல் பொங்கும் இருமைப்பட்ட ஒருகோணத்தே நின்று பார்க்கும்போது ஏற்படும் புதுமைகள் எவ்வளவு நலமுடையனவாக நம்மை ஈர்க்கின்றன. இதைக்காண முயலும் முயற்சியில், நம் சிந்தனை ஓட்டத்தை எங்கெங்கோ கொண்டுசெல்கிறோம்."

இவ்வாறு வண்ணைநகர் மணிவாசகர் சபையின் 35வது மணிவாசகர் விழாவில் சமுகந்தந்திருந்த பேராசிரியர் தென்னிந்தியா மண்டபத்தில் நேற்று ஆரம்பித்துவைத்து உரையாற்றிய

(6ம் பக்கம் பார்க்க)

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப் பட்ட பாடநெறிகளுக்கான விரிவுரைகள்
G. A. Q., 1st in Com, 1st In Laws, G. S. Q (Statistics)
ஆரம்பம் இன்று 29-12-79 காலை 10 மணி: இடம் விரிவுரை மண்டபம் 57, 59 பாங்சோல்வீதி, யாழ்ப்பாணம்
பிரதம அதிதி:- திரு. க. சிவநாதன், வடபிராந்திய மேலதிக கல்விப்பணிப்பாளர்
ஃ இதுவரை அனுமதி பெறுதோரும், 76. பிரதானவீதியிலுள்ள எமது அலுவலகத்தில் நேரில் விண்ணப்பித்து அனுமதி பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன
தேசிய உயர்கல்வி நிறுவனம் - யாழ்ப்பாணம்

